செ.வெ.எண்:849 /2016 நாள்: 30.11.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகளை இன்று (30.11.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வளர்ச்சி பணிகளை இன்று (30.11.2016) நேரில் சென்று, பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.7.411 இலட்சம் செலவில் இராஜாக்கமங்கலம் ஊராட்சி சாலை மேம்பாடு பணிகளையும், ராஜன் என்பவருக்கு ரூ.12 ஆயிரம் செலவில் கட்டபட்டு வரும் தனிநபர் இல்ல கழிப்பறை கட்டி முடிக்கப்பட்ட பணிகளையும், தாய் - II திட்டத்தின் கீழ் ரூ.30 இலட்சம் செலவில் இராஜாக்கமங்கலம் ஊராட்சியில் அம்மா விளையாட்டுத் திடல் மற்றும் உடற்பயிற்சி மையம் அமைப்பதற்கான இடங்களையும், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் மேலசங்கரன்குழி ஊராட்சியில் ரூ.5.89 இலட்சம் செலவில் நடைபெற்று வரும் சாலைகள் மேம்பாடு பணிகளையும், ரூ.0.75 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள மண்புழு இயற்கை உரம் தயாரிக்கும் பணிகளையும், ரூ.1.25 இலட்சம் செலவில் இரட்டைகுளம் பகுதியில் 500 மரகன்றுகள் நட்டு, பராமரிப்பு பணிகளையும், தாய் - II திட்டத்தின் கீழ் ரூ.30 இலட்சம் செலவில் சடையால்புதூர் பகுதியில் அம்மா விளையாட்டுத்திடல் மற்றும் உடற்பயிற்சி கூடம் அமைக்கப்பதற்கான இடங்களையும், தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (2016-17) ரூ.15.90 இலட்சம் செலவில் அத்திக்கடை, திக்கிலான்விளை, தாமரைக்குட்டி விளை ஆகிய பகுதிகளிலுள்ள சாலைகளில் ஜல்லி வைத்து தார் சாலை அமைக்கும் பணிகளையும், சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத்திட்டம்/ கூரைமட்டம் (2015-16) திட்டத்தின் கீழ் ரூ.8 இலட்சம் செலவில் காற்றாடித்தட்டு அரசு நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டும் பணிகளையும், தமிழ்நாடு ஊரகசாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (2016-17) ரூ.7.90 இலட்சம் செலவில் செம்பொன்கரை, நங்கூரன் பிலாவினை சாலைகளில் ஜல்லி வைத்து கருந்தலம் அமைக்கும் பணிகளையும், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ், (2015-16) ரூ.17 இலட்சம் செலவில் கேசவன்புத்தன்துறை ஊராட்சியில் கட்டி முடியும் தருவாயிலுள்ள ஊராட்சி சேவைமையம் கட்டிட பணிகளையும், மாநில நிதிக்குழு மானியம் (2015-16) திட்டத்தின் கீழ் ரூ.2.50 இலட்சம் செலவில் கேசவன்புத்தன் துறையில் பயணியர் நிழற்குடை அமைக்க நடைபெற்று வரும் பணிகளையும், சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், (2015-16) ரூ.5 இலட்சம் செலவில் கேசவன்புத்தன் துறையில் பல்நோக்குமைய கட்டிடம் கட்டும் பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (30.11.2016) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி. டி.ஹெட்சி லீமா அமலினி, உதவி செயற்பொறியாளர் திரு.திருநாவுக்கரசு, உதவி பொறியாளர்கள் திரு.சண்முகநாதன், திருமதி. மரிய தேவிகா, கவிதா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பகவதிபெருமான், திருமதி. உதயரோகிணி, பணிமேற்பார்வையாளர்கள் மற்றும் சாலை ஆய்வாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.